## பா.ஜ.க.வின் ‘டபுள் எஞ்சின்’ காலாவதியானது! வெல்லும் தமிழ்ப் பெண்களான நம் சகோதரிகள் –

# வீடுவீடாகச் சென்று கழக அரசின் சாதனைகளைச் சொல்லி வென்று காட்டுவோம்!

## தஞ்சையில் நடைபெற்ற டெல்டா மண்டல மகளிர் அணி மாநாட்டில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உறுதி!



தஞ்சை,ஜன.28-

**பா.ஜ.க.வின் ‘டபுள் எஞ்சின்’ காலாவதியான எஞ்சின்! என வெல்லும் தமிழ்ப் பெண்கள் டெல்டா மண்டல மகளிர் அணி மாநாட்டில் பங்கேற்ற கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

**கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

தஞ்சை மாவட்டம் செங்கிப்பட்டியில் வெல்லும் தமிழ்ப் பெண்கள் என்ற தலைப்பில் டெல்டா மண்டல தி.மு.க. மகளிர் அணி மாநாடு பிரம்மாண்டமாக நடைபெற்றது. திமுக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு முன்னிலையில், தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்த மாநாட்டிற்கு தலைமை தாங்கிப் பேசிய தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, பாஜகவின் டபுள் என்ஜின் என்பது காலாவதியான தோல்வியடைந்த என்ஜின் என்று குறிப்பிட்டார்.

‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ மாநாட்டின் மேடையில் அமைக்கப்பட்டுள்ள திராவிடக் கொள்கைத் தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் பேராசிரியர் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மலர்த் தூவி மரியாதை செலுத்தினர். தொடர்ந்து, கனிமொழி கருணாநிதிக்கு வீர வாள் பரிசாக தி.மு.க. முதன்மைச் செயலாளர் கே.என். நேரு வழங்கினார்.

**தமிழ்நாட்டை நோக்கி படையெடுப்போரின் கனவு பலிக்காது!**

மாநாட்டில் பேசிய கனிமொழி கருணாநிதி எம்.பி; வெல்லும் தமிழ்ப் பெண்கள் என்ற மாநாட்டை 2வது மாநாடாக தஞ்சையில் நடத்தக்கூடிய வாய்ப்பை கழகத் தலைவர் அளித்துள்ளார். கொங்கு மண்டலத்தில் இதே போல ஒரே மாநாடு நடைபெற்றது. அதை விஞ்சக்கூடிய மாநாடாக இந்த வெல்லும் தமிழ்ப்பெண்கள் மாநாட்டை நடத்திக்கொண்டுள்ளோம். பலபேர் பல கனவுகளோடு, தமிழகத்தை நோக்கி படையெடுத்து வருகிறார்கள். உள்ளூரிலும் சிலர் படையெடுக்கிறார். ஆனால், இந்த படை தளபதியின் படை, இது எந்தப் பக்கமும் திரும்பாது, இந்தப் படை இங்கே மட்டும்தான் கூடும், ஓட்டுப் போடும்.

ஏனென்றால், தமிழ்நாட்டு மக்கள் தெளிவானவர்கள். எங்க கைதட்டனும், எங்க பார்க்கணும், எங்க விலகி இருக்கனும், எந்தப் பக்கம் போகவே கூடாது என்பது தெரியும். அதைவிட புத்திசாலிகள் தமிழ்நாட்டில் உள்ள பெண்கள். வாய்ச்சவடால் விட்டு ஆட்சி நடத்தமுடியாது. நம்முடைய முதலமைச்சர் அவர்களால் மட்டுமே பெண்களுக்கான ஆட்சி, பெண்களை முன்னேற்றக்கூடிய ஆட்சியை, பெண்களின் எதிர்காலத்தைப் பற்றிய அக்கறை இருக்கக்கூடிய ஆட்சியை நடத்தமுடியும் என்று அவர்களுக்குத் தெரியும். யாரையும் நம்பி ஏமாந்து போகக்கூடியவர்கள் அல்ல தமிழ்ப் பெண்கள்.

யாரால கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியும் என்பதும் அவர்களுக்குத் தெரியும். யார் வேண்டுமானாலும் 10ஆயிரம் தருகிறேன், 8ஆயிரம் தருகிறேன், 2 ஆயிரம் தருகிறேன் என்று கூறலாம். திட்டத்தின் பெயரை மாற்றி குலவிளக்குத் திட்டம்னு சொல்லலாம். என்ன விளக்குத் திட்டமாக இருந்தாலும் ஒன்றும் வராது என்று தெரியும். இதற்கு முந்தைய ஆட்சியில் ஸ்கூட்டி கொடுப்பதாகச் சொன்னார்கள். வந்ததா? வரவில்லை. அதேபோல்,குலவிளக்கும் வீட்டுக்கும் வராது என்பது தெரியும்.

**பெண்களுக்கான ஆட்சி இது!**

ஆனால், உங்கள் மகளிர் உரிமைத் தொகை ஒவ்வொரு மாதமும் உங்கள் வீட்டுக் கதவைத் தட்டி வரும் என்பது தெரியும். ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட அன்றே, விடியல் பயணத்திற்கு கையெழுத்திட்ட முதலமைச்சர் நமது முதலமைச்சர் என்பது தெரியும். நம்ம வீட்டுப் பிள்ளைகள் படிக்க வேண்டும், பெண்கள் படிக்க வேண்டும் என்பதற்காக புதுமைப் பெண் திட்டத்தைக் கொண்டுவந்து நடத்திக்கொண்டிருக்கக்கூடிய, நடத்தக்கூடிய, நடத்தமுடியும் என்று காட்டக்கூடிய முதலமைச்சர் நமது முதலமைச்சர் மட்டும்தான். இதை யெல்லாம், தெளிவாக நமது பெண்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

எனவே, எந்தப் பக்கமும் திரும்பிக்கூடப் பார்க்க அவர்கள் தயாராக இல்லை என்பதை இந்த மாநாடு, பல கனவுகளோடு தமிழ்நாட்டை நோக்கி வந்திருப்பவர்களுக்கு நிச்சயமாக தெளிவுபடுத்தும். போதவில்லை என்றால் இன்னும் ஒரு மாநாடு கூட நடத்துகிறோம். தயவு செய்து உங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள்.

**ரிப்பேர் ஆன – தேறாத எஞ்சின் எங்களை வெல்ல முடியாது!**

அதுமட்டுமில்லை. வரும்போதெல்லாம், டபுள் என்ஜின் நாட்டுக்கு நல்ல என்ஜின் என்கிறார்கள். எனக்குத் தெரிந்து அந்த என்ஜின் என்றைக்குமே வேலை செய்யாத, ரிப்பேர் ஆன, தேறாத என்ஜின் ஆகத்தான் இருக்கிறது.ஏனென்றால், நமது திராவிட மாடல் என்ஜினை எடுத்துக் கொள்ளுங்கள். குஜராத்தில் மொத்த அரசு மருத்துவக் கல்லூரிகள் 6 மட்டும்தான்.

ஆனால், தமிழகத்தில்அரசு மருத்துவமனைகள் மட்டும் 2000க்கும் அதிகமாக இருக்கின்றன. அதில், படுக்கை வசதிகள் கிட்டத்தட்ட ஒரு லட்சத்தைத் தொட்டுக்கொண்டிருக்கிறது. உத்தரபிரதேசத்தில் கோவிட்நேரத்தில் மக்களை மருத்துவனைக்குள் அனுமதிக்கக்கூட முடியாத நிலை. திறந்தவெளியில், ஆட்டோவில்,வண்டிகளிலும், டிராக்டர்களிலும் படுத்துக் கிடந்தனர். ஒரு லட்சம் படுக்கை வசதிகள், மக்களின் ஆரோக்கியத்திற்காக, நலனுக்காக சாதித்துக்காட்டியிருக்கக்கூடிய ஆட்சி திராவிட என்ஜின் ஆட்சி.

தமிழகத்தில்தான் தொழில் வளர்ச்சி அதிகம். கிட்டத்தட்ட 38 ஆயிரம் தொழிற்சாலைகள் இருக்கக்கூடிய மாநிலம் தமிழ்நாடு. அந்தத் தொழிற்சாலைகளில் வேலைசெய்பவர்களில் 42 சதவீதம் பேர் பெண்கள். தமிழ்நாடுதான் மின்னணு சாதனங்கள், ஜவுளி ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கிறது. வேறு எந்த டபுள் என்ஜினும் இந்த சாதனையையெல்லாம் செய்யவில்லை.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் உள்ள மாநிலமாக தமிழகத்தைச் சொல்கிறார்கள். டபுள் என்ஜின் ஆட்சி நடக்கும் மாநிலங்களில்தான் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகமாக இருக்கிறது. அதைத் தாண்டி, சமூக மேம்பாட்டுக்குறியீட்டில் மிகப்பெரிய மாநிலங்களில் தமிழகம் முதலிடத்தில் இருக்கிறது.

**பா.ஜ.க. ஆளும் மாநிலங்களின் அவலநிலையைப் பாருங்கள்!**

டபுள் என்ஜின் மாநிலங்கள் எல்லாம் (உத்தரபிரதேசம், மத்தியபிரதேசம், ராஜஸ்தான்) 30இ 31,32,33வது இடங்களில் உள்ளன. இதுதான் டபுள் என்ஜின் செய்திருக்கக்கூடிய சாதனை.

ஜன.23ம் தேதி தமிழகம் வந்த பிரதமர் உரையாற்றி, அனைவரையும் கேள்வி கேட்டுவிட்டுச் சென்றுள்ளார். அவர் குஜராத்தின் முதலமைச்சராக இருந்தபோது, 2012ல் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 56ஆக இருந்தது. அப்போது, ஏன் இந்திய ரூபாயின் மதிப்பு இறங்கிக்கொண்டே போகிறது என்று அவர் கேட்டார். நல்ல ஆட்சி நடக்கவில்லை. நல்லவர்கள் கையில் ஆட்சி இல்லை. திறமையான வர்களிடம் ஆட்சி இல்லை. நம்மைச் சுற்றியுள்ள நாடுகளைவிட மோசமான நிலையில் இந்தியா உள்ளது. இங்கு நடக்கக்கூடிய ஆட்சிதான் அதற்குக் காரணம் என்றார்.

டெல்லியில் ஒன்றிய அரசாங்கம் இவர்கள் நடத்தக்கூடிய ஆட்சிதான். இன்று, ஒரு டாலருக்கு 92 ரூபாய் கொடுக்க வேண்டியுள்ளது. ரூபாய் மதிப்பு சரிந்துகொண்டே போகிறது. தனியாக ஆட்சி நடத்தும் இடத்திலேயே இவர்கள் ஒன்றுசெய்யவில்லை. அதேபோல, நீங்கள் நடத்தக்கூடிய ஆட்சியில் டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு இறங்கிக்கொண்டே போகிறது. இப்படிப்பட்ட ஒரு ஆட்சியை நடத்தும் நீங்கள் எங்களைப் பார்த்து கேள்வி கேட்கிறீர்கள். இந்த ஆட்சியை மாற்றிக்காட்டுவேன் என்று சபதம் விடுகிறீர்கள். நீங்கள் எந்தக் கனவுல இங்க வந்து இறங்கினாலும், நிச்சயமாக சரியான பாடத்தை தமிழ்ப் பெண்கள் உங்களுக்குச் சொல்லித்தருவார்கள்.

இன்று குடியரசு தினம்.. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி. ஆனா.. இங்க ஒருவர் உள்ளார். அவருக்கு குடியரசுன்னா என்னான்னு தெரியாது. கவர்னர். முதலமைச்சர் ஏன் அவரை அழைத்து சட்டப்பேரவையில் பேச வைக்கிறார் என்றே தெரியவில்லை. ஏனென்றால், வேற வழியில்லை. முதலமைச்சர் பொறுமையாக சகித்துக்கொண்டுள்ளார்.

ஒவ்வாரு ஆண்டும் ஆளுநர் வருகிறார். சட்டமன்றத்தில் கொடுக்கப்படும் உரையை படிக்க மாட்டார். ஏதேனும் ஒரு காரணம் சொல்கிறார். அவர் ஏன் வருகிறார்? நான் வரலைன்னு சொல்லலாமே...

ஒவ்வொரு ஆண்டும் சட்டப்பேரவைக்கு வந்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், முதலமைச்சர் சொல்லுவதை செய்ய முடியாது என்று இந்த மக்களை அவமதித்துவிட்டு செல்லக்கூடிய நிலையை நாம் பார்த்துக்கொண்டிக்கிறோம்.

**கவர்னரே வேண்டாம் – அவர்களால் எந்தப் பயனும் நாட்டுக்கு இல்லை!**

அதனால்தான், முதலமைச்சர் அவர்கள், உரையைப் படிக்கவே வேண்டாம் என்று கூறி, மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக அரசியலமைப்பை மாற்றுவதற்கான தீர்மானம் கொண்டுவந்துள்ளார். திமுக நீண்ட நாட்களாக தொடர்ந்து சொல்லிக்கொண்டுள்ளோம். இந்த கவர்னரே வேண்டாம். இவர்களால் எந்தப் பயனும் இல்லை.

நாடு முழுவதும் உள்ள கவர்னர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் 700 கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது. இந்தத் தொகையை, எத்தனையோ பிள்ளைகளின் படிப்பிற்கு, அவர்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்குச் செலவழிக்க முடியும். ஆனால், பா.ஜ.க. இல்லாத ஆட்சியை கஷ்டப்படுத்த வேண்டும்,அந்த மாநிலத்தைச் சேர்ந்த மக்களை அவமானப்படுத்த வேண்டும் என்பதற்காக, இந்த கவர்னர்களை ஒன்றிய அரசாங்கம் பயன்படுத்திக்கொண்டிருக்கிறது.

ஜன.23ம் தேதி பிரதமர் தமிழகம் வந்தார். அதற்கு முன்பும் வந்தால். இனிமேல் அடிக்கடி வருவார். எங்களுக்கு நன்றாகத் தெரியும். கோடைகால விடுமுறை, குளிர்கால விடுமுறையைப் போல், பிரதமர் பொதுவாக வெளிநாடுகளில் பயணம் செய்து கொண்டிருப்பார். இந்த தேர்தல் சீசன் நேரத்தில் மட்டும் பிரதமரின் விமானம் இந்தியா திரும்பும். எந்த மாநிலத்தில் தேர்தல் நடக்கிறதோ, அந்த மாநிலத்தில் பிரதமரின் விமானம் இறங்கும். தேர்தல் சீசனுக்கான ஒரு டூரிஸ்ட் பிரதமர்தான் நமது பிரதமர்.

**கூட்டணி கட்சியான அ.தி.மு.க.வின் பெயரையே சொல்லாத பிரதமர்!**

அந்த டூரிஸ்ட் பிரதமர் சமீபத்தில் இங்கு வந்து 45 நிமிடங்கள் பேசினார். அப்போது, பல முறை முதலமைச்சர் பெயரை குறிப்பிட்டார். தி.மு.க.வின் பெயரைச் சொன்னார். பல எதிர்க்கட்சிகளின் பெயரையெல்லாம் சொன்னார். ஆனால், அ.தி.மு.க. வின் பெயரை மட்டும் அவர் சொல்லவில்லை. மேடையிலேயே எடப்பாடி பழனிசாமி நின்றிருந்த போதும், 45 நிமிடப் பேச்சில் பிரதமர் அதிமுகவின் பெயரை சொல்லவே இல்லை. உங்க கட்சி பெயர் சொல்லப்படாத பெயராகவே போய்விடப்போகிறதோ என்ற கவலை எங்களுக்கு. தயவு செய்து ஜாக்கிரதையாக இருங்கள்.

கட்சியின் பெயரையே நிராகரிக்கக்கூடிய இடத்தில் நீங்கள் கூட்டணி வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். தொடர்ந்து, தமிழ்நாட்டுக்கு துரோகம் செய்துகொண்டிருக்கிறீர்கள். இப்போது உங்களை ஆளாக்கிய இயக்கத்திற்கு துரோகம் செய்து கொண்டிருக்கிறீர்கள் பழனிசாமி அவர்களே.. மக்கள் நிச்சயமாக பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். எந்த கால கட்டத்திலும் உங்களை மன்னிக்க மாட்டார்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பலமுறை இங்கு வரப்போகிறார் பிரதமர். சில கேள்விகளுக்கு பதில் சொல்லிவிட்டு வந்தால் நன்றாக இருக்கும். தமிழ்நாட்டுக் குழந்தைகளுக்கு தரவேண்டிய நிதி 2500 கோடியை எப்போது கொடுப்பார்? என்பதை சொல்லிவிட்டு வந்தால் நன்றாக இருக்கும்.

ஒசூர் விமானநிலையத்தை எப்போது தருவீர்கள்? வெள்ள நிவாரண நிதி எப்போது தருவீர்கள்? டீலிமிட்டேசன் வந்தால் தமிழ்நாட்டிற்கு பாதிப்பு இருக்குமா? இருக்காதா? எம்.பி.க்களின் எண்ணிக்கை குறையுமா? குறையாதா? என்று முதலமைச்சர் பலமுறை கேள்வி எழுப்பி பதிலைச் சொல்லுங்கள் என்று கேட்டார். இதுவரை பதில் இல்லை. தமிழகம் வரும்போது அதற்கான பதிலோடு வாருங்கள் பிரதமர் அவர்களே.

தமிழ் மீது திடீரென்று அக்கறை வந்ததுபோல் பேசுகிறீர்களே..இதுவரை சமஸ்கிருதத்திற்கு 2500 கோடி செலவு செய்திருக்கிறீர்கள். தமிழுக்கு 167 கோடி செலவு செய்திருக்கிறீர்கள். அந்த இரண்டையும் ஒன்றாக்கி விட்டு வாருங்கள் பிரதமர் அவர்களே..

**தமிழ்நாட்டுக்கு பா.ஜ.க. அரசு தொடர்ந்து செய்யும் துரோகம்!**

தொடர்ந்து தமிழ்நாட்டுத் திட்டங்களை நிறுத்த, தரவேண்டிய நிதியை நிறுத்திவிட்டு, சீசனுக்கு சீசன் வந்து இங்கு தேர்தல் பிரச்சாரம் மட்டும் செய்துவிட்டு, தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்துக்கொண்டே இருப்பவர்களோடு கூட்டணி வைத்துக் கொண்டிருப்பவர்கள் யார் என்பதை தமிழ்நாட்டுப் பெண்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் யாருக்கும் தமிழ் மண்ணில் இடமில்லை என்பதை நாம் காட்டுவோம்.

ஒவ்வொரு சகோதரியும் ஒரு தேர்ந்த பிரச்சார பீரங்கியாக ஒவ்வொரு வீடாகத் தேடிச் சென்று நமது சாதனைகளை எடுத்துச் சொல்லுங்கள். அவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாத்துக்கொள்ளச் சொல்லுங்கள்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி அவர்கள் உரையாற்றினார்.